கூட்டாட்சி அமைப்பு முறையின் அடிப்படைக் கொள்கைகள் சிதைந்தால் கட்டமைப்பே அழிந்துவிடும்!

இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினரும் உச்சநீதிமன்றத்தின் வழக்கறிஞருமான ரண்தீப் சிங் சுர்ஜேவாலா நேற்று (27.11.2025) 'தி இந்து' நாளேட்டிற்கு ஆங்கிலத்தில் எழுதியுள்ள கட்டுரையில், ஆளுநர்கள் மற்றும் இந்திய குடியரசு தலைவரின் அதிகாரங்கள் குறித்த 16 ஆவது குடியரசு தலைவரின் குறிப்புக்கு உச்சநீதிமன்றம் அளித்துள்ள கருத்துகள் இந்திய அரசியலமைப்பின் கூட்டாட்சிக்கு முரணானது என்று குறிப்பிட்டுள்ளார்.

அக்கட்டுரையின் தமிழாக்கம் வருமாறு:-

Presidential opinion versus the federal structure

In the journey of every nation, there comes a moment where institutions must stand up as solid guardrails to defend what is intrinsic to the foundational values of the nation-state. Because, if the foundational principles are allowed to crumble, the remaining structure will wither away. Further, the institutions which sanction such an obliteration of core ideas, almost always meet the same end. Once the tree falls, the branches cannot survive.

The Supreme Court of India has done just that, while answering the 16th Presidential reference on the powers of Governors and the President of India. The core philosophy of federalism, ingrained in India's Constitution, lies eroded and buried. The States will gradually become shadow Union Territories with Legislatures but dependent on the dictates of those in power in the central government. Federalism is a vital safeguard in addition to being part of the basic structure of the Constitution. Sounding the death knell for federalism would precipitate the absolute dominion of the Government of India over the remaining institutions that seek to control, regulate and quash arbitrariness and the autocracy of those in power at the Centre.

Equal partners

Under the constitutional scheme, the Union and States are equal partners, with the Government of India being only 'first among equals'. States are not subservient to the Union Government, nor are they secondary appendages, bound by the diktats of the Government of India. In fact, in all areas in the State list (such as land laws and law and order), they enjoy complete autonomy. Any other understanding of federalism in the Indian context would disrupt and violate the constitutional scheme envisaged by the framers of the Constitution.

If Bills/laws passed by the State Legislature are going to be kept pending by the Governor for months and then returned to the Legislature for 'reconsideration', and on reaffirmation by the Legislature then reserved for the assent of the President, it would effectively mow down an 'elected Legislature' before the whims of an 'unelected Governor'. This is the very anti-thesis of democracy.

Governors are appointees of the ruling party at the Centre, who, more often than not, act on the whims of those in power in the Government of India and even actively accommodate their political agendas. This is a reality that cannot be ignored or wished away.

Therefore, the scales of federalism and democracy must be weighed between what the Supreme Court calls the "unwritten and undefined powers" of an unelected Governor, acting to serve the political agenda of the Government of India vis-à-vis the mandate of an elected State Government and Assembly reflecting the will of the people of that State. How then can Governors be permitted to overrule the will of the people of the State?

Randeep Singh Surjewala is Member of Parliament (Indian National Congress), Rajya Sabha and an Advocate of the Supreme Court of India

The 16th Presidential reference could endanger the will of the people

Once the Legislature has passed a law, a timeline on the exercise of the powers by the Governor, under Article 200 of the Constitution of India, has to be read therein to bring it in conformity with the principle of federalism, which is part of the basic structure. This is not just harmonious but also imperative in the current climate of unprecedented administrative excesses. The two-judge Bench in the Tamil Nadu Governor's case (the decision which led the President to seek an opinion) understood this and prescribed finite and reasonable timelines accordingly.

What the touchstone is

The power of the Governor has to be tested on the touchstone of reasonableness, i.e., a reasonable time to think through and decide on the Legislation. If this timeline is not read, the Governor will become an unelected despot over an elected Government.

Let us not forget that fairness, reasonableness and non-arbitrariness are the threads that run through the veins of our Constitution, and especially Part III which protects citizens against a wayward state. If you anoint unelected Governors or even the President of India as unbridled monarchs over elected governments, the entire edifice of the Constitution will start to crumble.

"Judicial Review" is also a part of the basic structure of the Constitution. No authority, howsoever high it may be, including Parliament, can ever say that its actions will not be tested by judicial review.

The exercise of powers by the Governor or the President of India cannot remain alien to the principle of judicial review. The office of Governor or the President of India is not bigger than Parliament. Even Parliament cannot escape judicial review for its actions. So how can the Governor or the President of India claim immunity from judicial review, especially when they are creations of the same Constitution?

The theory of 'limited direction' propounded by the Court goes against the grain of the constitutional scheme, the doctrine of federalism, the doctrine of reasonableness enshrined in Article 14, the doctrine of judicial review and the principles of fairness and justice.

To give such unbridled power to the Governor and the President to keep important pieces of legislation pending for long periods of time, so as to defeat the very purpose thereof, cannot be accepted. This is tantamount to giving Governors a pocket veto and holding States captive to the whims of Governors (and the President) and also keeping States perpetually embroiled in litigation before the courts in order to get a direction for giving assent to every legislation. Ultimately, such an arrangement is constitutionally unsustainable and democratically indefensible.

A weakening of the federal structure

The other problem with the opinion is that it does not take into account the broader context of the series of designed attacks by the Centre on the federal structure in recent times. Here are some examples. First, ,the refusal by the central government to provide compensation to producing States for loss of Goods and Services Tax, thereby effectively disincentivising efficiencies, revenue generation and good governance.

Second, cess collected exclusively by the central government being used as an excuse to deny sharing of its revenue with the States.

Third, refusal by the central government to fully implement the devolutions recommended by the Finance Commission.

Fourth, forcing States to adhere to a 'one-size-fits-all' conditions to central schemes and making them conditionally applicable to States only on States agreeing to contribute up to 50% of the schemes budgeted expenditure. This puts unprecedented pressure on their already stressed finances.

Fifth, weaponisation of money in the central kitty by providing financial support as a quid pro quo for advancing the political agenda of the party at the Centre. The recent transfer of ₹10,000 to 1.21 crore women in Bihar very close to the Bihar Assembly election 2025 or the grant of a special financial package for Andhra Pradesh in the last Budget are two recent examples.

Sixth, misuse of the Central Bureau of Investigation/Enforcement Directorate/Income-Tax Department to raid, browbeat, arrest Chief Ministers and Ministers and bring down Opposition governments.

And, finally, to top it all, central control through the Governor's fiat, which will be the 'straw that broke the camel's back as far as federalism is concerned.

If this deep distortion of federalism is permitted to take root, the Union Government will command unrestrained authority while States are reduced to mere administrative outposts. Democracy cannot survive where the will of the people is held hostage to the whims of unelected constitutional functionaries. It is imperative that citizens take notice, institutions reflect, and the Supreme Court reconsiders. *Because the preservation of federalism is the preservation of India itself.*

விழுந்த மரத்தின் கிளைகள் தப்பி பிழைக்க முடியாது!

ஒவ்வொரு நாட்டின் பயணத்திலும், அதன் அடிப்படைக் கொள்கைகளுக்கு உள்ளார்ந்தவற்றை பாதுகாக்க, நிறுவனங்கள் உறுதியான பாதுகாப்பு அரண்களாக (guardrails) நிற்க வேண்டிய ஒரு தருணம் வருகிறது. ஏனெனில், அடிப்படைக் கொள்கைகள் சிதைய அனுமதிக்கப்பட்டால், எஞ்சியிருக்கும் கட்டமைப்பும் அழிந்துபோகும். மேலும், அத்தகைய அடிப்படைக் கருத்துகளை அழிப்பதற்கு ஒப்புதல் அளிக்கும் நிறுவனங்களும், பெரும்பாலும் அதே முடிவைத்தான் சந்திக்கின்றன. மரம் விழுந்தவுடன், கிளைகளால் தப்பிப் பிழைக்க முடியாது.

இந்திய உச்ச நீதிமன்றம், ஆளுநர்கள் மற்றும் இந்தியக் குடியரசுத் தலைவரின் அதிகாரங்கள் குறித்த 16வது குடியரசுத் தலைவரின் குறிப்புக்கு பதிலளிக்கும் போது, அதையேதான் செய்துள்ளது. இந்தியாவின் அரசியலமைப்பில் ஆழமாகப் பதிந்துள்ள கூட்டாட்சியின் அடிப்படைக் கோட்பாடு அரிக்கப்பட்டு, புதைக்கப்பட்டுவிட்டது.

மாநிலங்கள் படிப்படியாகச் சட்டசபைகளுடன் கூடிய, ஆனால் ஒன்றிய அரசின் அதிகாரத்தில் உள்ளவர்களின் கட்டளைகளைச் சார்ந்துள்ள, நிழல் யூனியன் பிரதேசங்களாக மாறிவிடும். கூட்டாட்சி என்பது அரசியலமைப்பின் அடிப்படைக் கட்டமைப்பின் ஒரு பகுதியாக இருப்பதுடன், ஒரு முக்கியப் பாதுகாப்புக் கருவியாகவும் உள்ளது.

கூட்டாட்சிக்கு மரண ஓசை எழுப்புவது...!

கூட்டாட்சிக்கு மரண ஓசையை எழுப்புவது, ஒன்றிய அரசின் அதிகாரத்தில் உள்ளவர்களின் தன்னிச்சையான செயல்பாடுகளையும் மற்றும் சுயஆட்சியையும் கட்டுப்படுத்த, ஒழுங்குபடுத்த மற்றும் ரத்து செய்ய முயலும் எஞ்சிய நிறுவனங்களின் மீது இந்திய அரசாங்கத்தின் முழுமையான ஆதிக்கத்தை விரைவுபடுத்தும்.

மாநிலங்கள் ஒன்றியத்திற்கு அடிமை அல்ல!

அரசியலமைப்புத் திட்டத்தின் கீழ், ஒன்றிய மற்றும் மாநில அரசுகள் சமமான பங்காளர்களாக உள்ளன, இந்திய அரசாங்கம் 'சமமானவற்றில் முதன்மை யானது' மட்டுமே ஆகும். மாநிலங்கள் ஒன்றிய அரசாங்கத்திற்கு அடிபணிந்தவை அல்ல, அல்லது இந்திய அரசாங்கத்தின் கட்டளைகளுக்குக் கட்டுப்பட்ட இரண்டாம் நிலை இணைப்புகளும் அல்ல. உண்மையில், மாநிலப் பட்டியலில் உள்ள அனைத்துப் பகுதிகளிலும் (நிலச் சட்டங்கள் மற்றும் சட்டம்ஒழுங்கு போன்றவை), அவை முழுமையான சுதந்திரத்துடன் செயல்படுகின்றன. இந்தியச் சூழலில் கூட்டாட்சியைப் பற்றி வேறு எந்தப் புரிதலும், அரசியலமைப்பை உருவாக்கியவர்களின் நோக்கத்திலான அரசியலமைப்புத் திட்டத்தைச் சீர்குலைத்து மீறுவதாக அமையும்.

மாநிலச் சட்டமன்றத்தால் நிறைவேற்றப்படும் மசோதாக்கள்/சட்டங்கள் ஆளுநரால் மாதக்கணக்கில் நிலுவையில் வைக்கப்பட்டு, பிறகு 'மறுபரிசீலனை'க்காகச் சட்டமன்றத்திற்குத் திருப்பியனுப்பப்பட்டால், மேலும் சட்டமன்றத்தால் மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டால், பின்னர் குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக அவை ஒதுக்கி வைக்கப்பட்டால், அது, 'தேர்ந்தெடுக்கப்படாத ஆளுநரின்' விருப்பத்திற்குக் கீழ்ப்படிந்து 'தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றத்தைத்' திறம்பட நசுக்கிவிடும். இது ஜனநாயகத்தின் அசல் கொள்கைக்கு முற்றிலும் முரணானது ஆகும்.

ஆளுநர்கள் ஒன்றிய அரசாங்கத்தில் ஆளும் கட்சியால் நியமிக்கப்பட்டவர்கள், இவர்கள் பெரும்பாலும் இந்திய அரசாங்கத்தில் அதிகாரத்தில் இருப்பவர்களின் விருப்பங்களுக்கு ஏற்பவே செயல்படுகிறார்கள், மேலும் அவர்களின் அரசியல் நிகழ்ச்சி நிரல்களுக்குச் சாதகமாகவும் துணை நிற்கிறார்கள். இது புறக்கணிக்கவோ அல்லது வேண்டாமென்று நினைக்கவோ முடியாத ஒரு உண்மை ஆகும்.

எனவே, கூட்டாட்சி மற்றும் ஜனநாயகத்தின் தராசுகள், இந்திய அரசாங்கத்தின் அரசியல் நிகழ்ச்சி நிரலுக்குச் சேவை செய்வதற்காகச் செயல்படும் தேர்ந்தெடுக்கப்படாத ஆளுநரின் 'எழுதப்படாத மற்றும் வரையறுக்கப்படாத அதிகாரங்கள்' என்று உச்ச நீதிமன்றம் குறிப்பிடுவதற்கும், அத்துடன் அந்த மாநில மக்களின் விருப்பத்தைப் பிரதிபலிக்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசாங்கம் மற்றும் சட்டமன்றத்தின் ஆணையை ஒப்பிட்டும் நிறுக்கப்பட வேண்டும். அவ்வாறானால், மாநில மக்களின் விருப்பத்தை ஆளுநர்கள் எவ்வாறு மீற அனுமதிக்க முடியும்.

ரண்தீப் சிங் சுர்ஜேவாலா

(இந்திய தேசிய காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர், இந்திய உச்ச நீதிமன்றத்தின் வழக்கறிஞர்)

ஒரு சட்டமன்றம் ஒரு சட்டத்தை நிறைவேற்றிய பிறகு, இந்திய அரசியலமைப்பின் சரத்து 200இன் கீழ் ஆளுநர் தனது அதிகாரங்களைப் பயன்படுத்துவதற்கான காலக்கெடு அதில் சேர்க்கப்பட வேண்டும். அப்போதுதான் இது, அரசியலமைப்பின் அடிப்படைக் கட்டமைப்பின் ஒரு பகுதியாக இருக்கும் கூட்டாட்சித் தத்துவத்துடன் இணங்கிச் செல்லும். இது இணக்கமாக இருப்பது மட்டுமல்லாமல், முன்னெப்போதும் இல்லாத நிர்வாக வரம்புகளைக் கொண்ட தற்போதைய சூழ்நிலையில் அவசியமானதும் ஆகும். தமிழ்நாடு ஆளுநர் வழக்கில் (குடியரசுத் தலைவர் ஒரு கருத்தைக் கேட்க வழிவகுத்த முடிவு) இரண்டு நீதிபதிகள் அடங்கிய அமர்வு இதை உணர்ந்து, அதற்கேற்ப வரையறுக்கப்பட்ட மற்றும் நியாயமான காலக்கெடுகளை விதித்தது.

ஆளுநரின் அதிகாரம் நியாயத்தின் அளவுகோலின் அடிப்படையில் சோதிக்கப்பட வேண்டும்

அதாவது, சட்டத்தைப் பற்றிச் சிந்தித்து முடிவெடுக்க ஒரு நியாயமான கால அவகாசம் இருக்க வேண்டும். இந்த காலக்கெடு இதில் சேர்க்கப்படாவிட்டால், ஆளுநர் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தின் மீது தேர்ந்தெடுக்கப்படாத ஒரு கொடுங்கோலனாக மாறிவிடுவார். நியாயத் தன்மை, விவேகம் மற்றும் தன்னிச்சையற்ற தன்மை ஆகியவை நமது அரசியலமைப்பின் நரம்புகள் வழியாக ஓடும் இழைகள் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. குறிப்பாக ஒரு பிழையான அரசுக்கு எதிராக குடிமக்களைப் பாதுகாக்கும் பகுதி III தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கங்களின் மீது தேர்ந்தெடுக்கப்படாத ஆளுநர்களை அல்லது இந்தியக் குடியரசுத் தலைவரைக் கூட கட்டுப்பாடற்ற மன்னர்களாக முடிசூட்டினால், அரசியலமைப்பின் முழு அமைப்பும் சிதைந்து போகத் தொடங்கும்.

குடியரசுத் தலைவர் பதவி நாடாளுமன்றத்தை விட பெரியது அல்ல!

நீதித்துறை மறுஆய்வு என்பதும் அரசியலமைப்பின் அடிப்படைக் கட்டமைப்பின் ஒரு பகுதி ஆகும். நாடாளுமன்றம் உட்பட எந்த ஒரு உயர் அதிகார அமைப்பும், அதன் செயல்பாடுகள் நீதித்துறை மறுஆய்வுக்கு உட்படுத்தப்படாது என்று ஒருபோதும் கூற முடியாது. ஆளுநர் அல்லது இந்தியக் குடியரசுத் தலைவரின் அதிகாரங்களைப் பயன்படுத்துவதும் நீதித் துறை மறுஆய்வுக் கொள்கைக்கு அப்பாற்பட்டதாக இருக்க முடியாது. ஆளுநர் அல்லது இந்தியக் குடியரசுத் தலைவர் பதவியானது நாடாளுமன்றத்தை விடப் பெரியது அல்ல.

நாடாளுமன்றமே அதன் செயல்பாடுகளுக்கு நீதித்துறை மறுஆய்வில் இருந்து தப்பிக்க முடியாது எனும்போது, ஆளுநர் அல்லது இந்தியக் குடியரசுத் தலைவர், குறிப்பாக ஒரே அரசியலமைப்பால் உருவாக்கப்பட்டவர்கள், எவ்வாறு நீதித்துறை மறுஆய்வில் இருந்து விலக்கு கோர முடியும்? நீதிமன்றத்தால் முன்வைக்கப்பட்ட 'வரையறுக்கப்பட்ட வழிகாட்டுதல்' என்ற கோட்பாடு, அரசியலமைப்புத் திட்டம், கூட்டாட்சித் தத்துவம், சரத்து 14இல் பொதிந்துள்ள நியாயதன்மைத் தத்துவம், நீதித் துறை மறுஆய்வுத் தத்துவம், மற்றும் நியாயம் மற்றும் நீதியின் கொள்கைகள் ஆகியவற்றுக்கு முரணாக உள்ளது.

முக்கியமான சட்ட முன்வடிவுகளை நீண்ட காலத்திற்கு நிலுவையில் வைப்பதன் மூலம், அவற்றின் நோக்கத்தையே தோற்கடிக்கும் விதமாக, ஆளுநர் மற்றும் குடியரசுத் தலைவருக்கு அத்தகைய கட்டுப்பாடற்ற அதிகாரத்தை வழங்குவது ஏற்றுக்கொள்ள முடியாதது. இது ஆளுநர்களுக்கு 'பாக்கெட் வீட்டோ' அதிகாரத்தை வழங்குவதற்குச் சமம்; மேலும், மாநிலங்களை ஆளுநர்களின் (மற்றும் குடியரசுத் தலைவரின்) விருப்பங்களுக்கு அடிபணிய வைப்பதுடன், ஒவ்வொரு சட்ட முன்வடிவுக்கும் ஒப்புதல் பெற நீதிமன்றங்களில் வழக்குகளில் நிரந்தரமாகச் சிக்கிக் கொள்ள வைக்கும். இறுதியில், இத்தகைய ஏற்பாடு அரசியலமைப்பு ரீதியாக நிலைத்திருக்க முடியாதது மற்றும் ஜனநாயக ரீதியாக நியாயப்படுத்த முடியாதது ஆகும்.

ஒன்றிய அரசு மாநிலங்களை சீரழிக்கும் கட்டளைகள்!

இந்தக் கருத்தில் உள்ள மற்ற பிரச்சினை என்னவெனில், அண்மைக் காலங்களில் மத்திய அரசால் கூட்டாட்சி அமைப்பின் மீது தொடுக்கப்பட்ட தொடர்ச்சியான திட்டமிடப்பட்ட தாக்குதல்களின் பரந்த சூழலை இது கணக்கில் கொள்ளவில்லை. அதற்குச் சில எடுத்துக்காட்டுகள்:

★ முதலாவதாக, சரக்கு மற்றும் சேவை வரியை இழந்ததற்கான இழப்பீட்டை உற்பத்தி செய்யும் மாநிலங்களுக்கு ஒன்றிய அரசு வழங்க மறுப்பது, இதன் மூலம் திறன், வருவாய் ஈட்டுதல் மற்றும் நல்லாட்சி ஆகியவற்றிற்கு ஊக்கமளிப்பதைத் திறம்படத் தடுக்கிறது.

★ இரண்டாவதாக, ஒன்றிய அரசால் பிரத்யேகமாக வசூலிக்கப்படும் செஸ், அதன் வருவாயை மாநிலங்களுடன் பகிர்ந்தளிக்க மறுக்க ஒரு சாக்காகப் பயன்படுத்தப்படுகிறது.

★ மூன்றாவதாக, நிதி ஆணையம் பரிந்துரைத்த நிதிப் பங்கீடுகளை முழுமையாகச் செயல்படுத்த ஒன்றிய அரசு மறுப்பது.

★ நான்காவதாக, ஒன்றிய அரசின் திட்டங்களுக்கு 'ஒரே மாதிரியான' நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட மாநிலங்களை வற்புறுத்துவது, மற்றும் அந்தத் திட்டங்களின் பட்ஜெட் செலவில் 50 சதவீதம் வரை பங்களிக்க மாநிலங்கள் ஒப்புக்கொண்டால்மட்டுமேநிபந்தனையுடன் பொருந்தக்கூடியதாக்குவது - இது ஏற்கனவே அழுத்தத்தில் உள்ள மாநிலங்களின் நிதியியல் மீது முன்னோடியில்லாத அழுத்தத்தை அளிக்கிறது.

★ ஐந்தாவதாக, ஒன்றிய அரசிடம் உள்ள பணத்தை, ஆளும் கட்சியின் அரசியல் நிகழ்ச்சி நிரலை முன்னெடுப்பதற்கான 'பதிலுக்குப் பதில்' என்ற நிதியுதவியாக வழங்குவதன் மூலம் அதைப் போர்க்கருவியாக்குவது; இதற்கு, 2025 பீகார் சட்டமன்றத் தேர்தலுக்கு மிக நெருக்கமாக பீகாரில் உள்ள 1.21 கோடி பெண்களுக்கு ரூ.10,000/மாற்றப்பட்டதும், அல்லது கடந்த பட்ஜெட்டில் ஆந்திரப் பிரதேசத்திற்குச் சிறப்பு நிதித் தொகுப்பு வழங்கப்பட்டதும் அண்மைக்கான எடுத்துக்காட்டுகள் ஆகும்.

★ ஆறாவதாக, ஒன்றிய புலனாய்வுத் துறை, அமலாக்கத்துறை, வருமான வரித் துறை ஆகியவற்றைப் பயன்படுத்தி முதலமைச்சர்கள் மற்றும் அமைச்சர்கள் மீது சோதனை நடத்துவது, அச்சுறுத்துவது, கைது செய்வது மற்றும் எதிர்க்கட்சி அரசாங்கங்களைக் கவிழ்ப்பது;

★ இறுதியாக, இவற்றின் உச்சமாக, கூட்டாட்சியைப் பொறுத்தவரை ' ஒட்டகத்தின் முதுகை உடைக்கும் வைக்கோல் துண்டாக' அமையப்போகும் ஆளுநரின் கட்டளைகள் மூலமான ஒன்றிய அரசின் கட்டுப்பாடு. கூட்டாட்சியின் இந்த ஆழமான சிதைவு வேரூன்ற அனுமதிக்கப்பட்டால், ஒன்றிய அரசு கட்டுப்பாடற்ற அதிகாரத்தைக் கொண்டிருக்கும்.

அதே நேரத்தில் மாநிலங்கள் வெறும் நிர்வாகப் புறக்காவல் நிலையங்களாகக் குறைக்கப்படும். மக்களின் விருப்பம் தேர்ந்தெடுக்கப்படாத அரசியலமைப்புச் செயல்பாட்டாளர்களின் விருப்பங்களுக்குப் பணயக் கைதியாக இருக்கும் இடத்தில் ஜனநாயகம் நிலைத்திருக்க முடியாது. குடிமக்கள் இதைக் கவனிக்க வேண்டும், நிறுவனங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும், மற்றும் உச்ச நீதிமன்றம் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்பது கட்டாயமாகும். ஏனெனில், கூட்டாட்சியைக் காப்பது என்பது இந்தியாவைக் காப்பதே ஆகும்.

- நன்றி
'தி இந்து'
27.11.2025

துணை முதல்வர் பிறந்தநாள் : விருதுநகர் தெற்கு மாவட்ட

விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் நலத்திட்ட உதவிகள்!

கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ஆர்.ரமேஷ் தலைமையில் வழங்கல்!

விருதுநகர், நவ.28- தமிழ்நாடு துணை முதலமைச்சர் கழக இளைஞர் அணி செயலாளர் மாண்புமிகு. உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு விருதுநகர் தெற்கு மாவட்ட செயலாளர் மற்றும் வருவாய் & பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் ஆலோசனைப்படி விருதுநகர் தெற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே கே எஸ் எஸ் ஆர் ஆர் ரமேஷ் தலைமையில் நலஉதவிகள் வழங்கப்பட்டது.

அருப்புக்கோட்டை, சாத்தூர் நகர செயலாளர்கள் மணி, குருசாமி, ஒன்றிய செயலாளர்கள் பாலகணேசன், பொன்ராஜ், கடற்கரைராஜ், முருகேசன், தலைமை கழக பொதுக்குழு உறுப்பினர்கள் KKSVT சுப்பாராஜ், சிவப்பிரகாசம், இளைஞர் அணி மாவட்ட துணை அமைப்பாளர் K S பாபுஜி, ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர்கள் அழகு ராமானுஜம், தங்கமணி உள்ளிட்ட பலர் பங்கேற்றனர். மாவட்ட, நகர ஒன்றிய இளைஞர் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர்கள் இளங்கோ, வினோத், தட்சிணா மூர்த்தி, சிவா, விஜய ராகவன், முருகன், ரமேஷ், ஏற்பாட்டில் அருப்புக்கோட்டை நகரத்தில் முதியோர்களுக்கு அன்னதானம் வழங்குதல், அரசு மருத்துவமனையில் கர்ப்பிணி பெண்களுக்கு மற்றும் உள்நோயாளிக்களுக்கு நலதிட்ட உதவிகள் மற்றும் பள்ளி மாணவ மாணவிகளுக்கு சிறப்பு மதிய உணவு வழங்கப்பட்டது, இருக்கன்குடியில் கழகத்தின் சார்பாக பேருந்து நிலையம் முன்பாக பொது மக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

சாத்தூர் ஒன்றியம் ஒத்தயால் கிராமத்தில் விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பாக பொது மக்களுக்கு வேஷ்டி,சேலை வழங்கப்பட்டது மற்றும் பள்ளி குழந்தைக்களுக்கு நோட் புத்தகம் வழங்கப்பட்டது. இதில் கழக நிர்வாகிகள், இளைஞர் அணி மற்றும் விளையாட்டு மேம்பாட்டு அணி நிர்வாகிகள், பொது மக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

சிவகங்கை மாவட்டம் பள்ளத்தூர் அரசு மருத்துவமனையில் கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு மருத்துவ உபகரணங்களை பொதுக்குழு உறுப்பினர் பள்ளத்தூர் கே.ஏஸ்.ரவி வழங்கினார்.இதில் முனீஸ்வரன் உட்பட அரசு மருத்துவ அதிகாரி, பொதுமக்கள் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.